Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 77/2019** |
| Deposition of witness for | :: | **PW. 9** |
| Name | :: | **சர்மிளா (சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**11.03.2026**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது விருதுநகர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.10.2017 ம் தேதி பந்தல்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்று இரவு 22.30 மணிக்கு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று நான் வேறு அலுவலில் இருந்த காரணத்தினால் பந்தல்குடி காவல்நிலைய தலைமை காவலர் திரு. மாரிமுத்து என்பவரை காயம் பட்ட நபர்களை விசாரிக்க அலுவல் நியமித்து அனுப்பினேன். அன்றை தினம் காயம்பட்ட நபர்கள் சிகிச்சையில் இருந்த காரணத்தினால் விசாரணை செய்ய முடியவில்லை என எனக்கு தகவல் சொன்னார்.

2. பின்னர் 19.10.2017 ம் தேதி எனது உத்தரவின் பேரில் மேற்படி காவலர் திரு.மாரிமுத்து என்பவர் காலை 08.00 மணிக்கு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்குச் சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த இவ்வழக்கின் புகார்தாரர் திருமதி. அழகம்மாள் மற்றும் வெள்ளைச்சாமி ஆகியோர்களை விசாரணை செய்து திருமதி. அழகம்மாள் கொடுத்த வாய்மொழி வாக்குமூலத்தை பதிவு செய்து

அழகம்மாளிடம் கையொப்பம் பெற்றும், சாட்சி கையெழுத்தாக வெள்ளைச்சாமியிடம் பெற்றும் காலை 11.00 மணிக்கு நிலையத்தில் அறிக்கை செய்தார்.

3. மேற்படி மனுவினை நான் பார்வையிட்டு அன்றை தினம் காலை 11.00 மணிக்கு பந்தல்குடி காவல் நிலைய சமுதாய பணி பதிவேடு எண்.115/2017 பதிவு செய்தேன். மேற்படி மனு சம்மந்தமாக விசாரணை செய்து சம்பவம் உண்மையென தெரியவந்ததால் 26.10.2017ம் தேதி மாலை 15.00 மணிக்கு பந்தல் குடி காவல்நிலைய குற்ற எண்.206/2017 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 109, 506(i) IPC r/w 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவின் அசல் ஆகியவற்றை கனம் நீதிமன்றத்திற்கும் நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

4. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கின் புகார்தாரரான திருமதி. அழகம்மாள் மற்றும் சாட்சி வெள்ளைச்சாமி ஆகியோரை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்து 161(3) குவிமுச வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்று மாலை 17.00 மணிக்கு சம்பவ இடமான வதுவார்பட்டி காலனி வீட்டிற்குச் சென்று சம்பவ இட சாட்சிகளான ஆரோக்கியம் மற்றும் பொன்னுபாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **( பார்வை மகஜர் அ.சா.ஆ.9 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** சம்பவ இடத்தில் பார்வை மகஜரில் மேற்படி இரண்டு சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், விசாரணை செய்து 161(3) குவிமுச வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. மேலும் இவ்வழக்கின் சாட்சிகளான வேலுத்தாய், ராமலட்சுமி, மாயழகு ஆகியோர்களை வதுவார்பட்டி கிராமத்தில் வைத்து தனித்தனியாக விசாரணை செய்து 161(3) குவிமுச வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் 1வது எதிரியான கணேசன் என்பவரை தேடி வந்த நிலையில் 27.10.2017ம் தேதி காலை 10.00 மணிக்கு வதுவார்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து, அன்றைய தினம் 11.00 மணிக்கு பந்தல்குடி காவல்

நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்தேன்.

6. மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களை பின்பற்றி 1வது எதிரி கணேசனை தக்க வழிக்காவலுடன் கனம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். 04.11.2017 ம் தேதி விருதுநகர் ஆயுதப்படையில் வைத்து இவ்வழக்கின் சாட்சிகளான பெண் காவலர் திருமதி. தனலெட்சுமி, பெண் காவலர் திருமதி.மாதஸ்லோன்மணி மற்றும் உதவி ஆய்வாளர் திரு. விருமாண்டி ஆகியோர்களை விசாரணை செய்து 161(3) குவிமுச வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கின் சாட்சிகளான செல்வம் மற்றும் ராமநாதன் ஆகியோர்களை வதுவார்பட்டி கிராமத்தில் வைத்து விசாரணை செய்து 161(3) குவிமுச வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்து எனது ரகசிய விசாரணையில் இருந்து இவ்வழக்கின் 2வது எதிரி திருமதி. செந்தாமரை என்பவர் சம்பவத்தன்று சம்பவ இடத்தில் இல்லை என்பது தெரியவந்ததால், அன்றை தினம் எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்து அதன் அசலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **( எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

7. பின்னர் 16.11.2017 ம் தேதி இவ்வழக்கின் காயம்பட்ட புகார்தாரர் மற்றும் சாட்சி வெள்ளைச்சாமி ஆகியோர்களுக்கு விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று மேற்படி இரண்டு நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. காமாட்சி பாண்டியன் என்பவரை விசாரணை செய்து 161(3) குவிமுச வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி மருத்துவரின் வாக்குமூலத்தில் இருந்து 17.11.2017 ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(b), 323, 109, 506(i) IPC r/w 4 of TNPHW Act ல் இருந்த சட்டப்பிரிவுகள் 294(b), 323, 325, 506(i) IPC r/w 4 of TNPHW Act ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ .12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

8. இவ்வழக்கின் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும், எனது ரகசிய விசாரணையில் இருந்தும் இவ்வழக்கின் எதிரி கணேசன் குற்றம் புரிந்துள்ளார் என்பது உண்மையென தெரியவந்ததால் சட்டப்பிரிவுகள்

294(b), 323, 325, 506(i) IPC r/w 4 of TNPHW Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையானது வழக்கு சம்பவ தேதியில் இருந்து 8 நாட்கள் கழித்து தாமத்ததுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், முதலில் மனு ரசீது வழங்கப்பட்டு பின்னர் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள குற்ற பிரிவுகள் அனைத்தும் பிடியாணையின் கீழ் எதிரியை கைது செய்யக்கூடிய குற்ற பிரிவுகள் (Cognizable offence) என்றால் சரிதான். பின்னர் எதற்காக உடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் மனு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்பதற்கான குறிப்பிட்ட காரணங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசாஆ.1 புகார் வாக்குமூலத்தில் பொது இடத்தில் வைத்து தகாத வார்த்தையால் திட்டியதாகவோ, என்ன தகாத வார்த்தையை பயன்படுத்தி திட்டினார்கள் என்று குறிப்பிட்டு காண்பிக்கவில்லை என்றால் சரிதான்.

2. அசா.1 அவரின் புகார் வாக்குமூலத்தில் எதிரி கணேசன் கொலை மிரட்டல் விடுத்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான், அவரின் 161(3) குவிமுச வாக்குமூல விசாரணையின் போது எதிரி கணேசன் மிரட்டியதாக கூறியுள்ளார். சாட்சிகள் வேலுத்தாய், ராமலெட்சுமி ஆகியோர்கள் வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள வேல்முருகன் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் வாங்குவதற்காக சென்ற தலைமை காவலர் மாரிமுத்து இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையின்போது அசா.1னின் வீட்டிற்கு எதிரே எதிரியின் வீடு அமைந்துள்ள விவரம் எனக்கு தெரிய வந்ததா என்றால் வதுவார்பட்டியில் எதிரிக்கு இரண்டு வீடு உள்ளது அதில் ஒரு வீடு அசா.1னின் வீட்டிற்கு எதிரே உள்ளது. ஆனால் மாதிரி வரைபடத்தில் எதிரியின் வீட்டை காண்பிக்கவில்லை என்றால் சரிதான்.

3. அசா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை வரிசை எண். 12ல்

18.10.2017 ம் தேதி தலைமை காவலர் மாரிமுத்து என்பவர் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அசா.1 அழகம்மாள் சிகிச்சை பெற்று தூக்க நிலையில் விசாரிக்க இயலாத வகையில் இருந்ததாக நான் குறிப்பிட்டுள்ள விவரத்தை மருத்துவர் காமாட்சிபாண்டியனை விசாரணை செய்தபோது அவர் என்னிடம் கூறினாரா என்றால் நான் மருத்துவரிடம் அதுபற்றி கேள்வி எழுப்பவில்லை அதனால் கூறவில்லை. அசா.1 அழகம்மாள் எனது விசாரணையின்போது காவல் நிலையத்திற்கு வந்து தகவல் கொடுத்துவிட்டு தான் மருத்துவமனைக்கு சென்றதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர்கள் எனது விசாரணையின்போது முதல் தகவல் அறிக்கையில் காண்பிக்கப்பட்ட 2 வது எதிரியான செந்தாமரை என்பவர் போன் மூலமாக தகவல் சொல்லி தான் 1 வது எதிரி கணேசன் சம்பவ இடத்திற்கு வந்ததாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திலேயே முதல் தகவல் அறிக்கையில் காண்பிக்கப்பட்ட 2 வது எதிரி இல்லை என்ற காரணத்தினால் தான் எனது விசாரணையின் அடிப்படையில் அவரை இவ்வழக்கில் இருந்து நீக்கி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி செந்தாமரை என்பவரை வழக்கில் இருந்து நீக்கியது பொறுத்து அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர்களிடம் நான் மறுவாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி கணேசன் இவ்வழக்கு சம்பவ தேதியன்று நடந்த சம்பவம் தொடர்பாக கொடுத்த புகாரின் மீது அசா.1, அசா.2 மற்றும் அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், நான் தான் பதிவு செய்தேன். அதனை விசாரணை செய்து அதில் கூறப்பட்ட பொருண்மைகள் தவறாக இருக்கிறது என்று வழக்கை முடித்து வைத்தேன். சொன்ன நாள் தேதி நேரத்தில் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

5. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடமானது காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன முறையில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை

என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக அசா.1 கொடுத்த பொய் புகாரை முறையாக விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக மட்டும் நான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல, எதிரி சம்பவ தேதியில் இருந்து 8 நாட்கள் கழித்து 26.10.2017 ம் தேதி தான் புகார் கொடுத்தார். குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஒருபோதும் அசா.1 மற்றும் அசா.2 ஐ அசிங்கமாக திட்டி அடித்து கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**